SALZBURG
GLOBAL
SEMINAR

EDUCATION FOR
TOMORROW'S WORLD

# The Salzburg Statement
## for Social and Emotional Learning
## சமூக மற்றும் உணர்வுபூர்வமான கற்றலுக்கான
## செல்ஸ்பேர்க் கூற்று

### ஒரு உலகளாவிய கூட்டணி

சமூக மற்றும் உணர்வுபூர்வமான திறன்கள் தனிப்பட்டவர்களுக்கு அவர்களது உணர்வுகள், ஏனையோருடன் பணியாற்றுதல் மற்றும் அவர்களது இலக்குகளை அடைதல் ஆகியவற்றை முகாமை செய்வதற்கு இடமளிக்கும் பிரதான மானிட இயல்திறன்களாகும். அவை ஒவ்வொரு பிள்ளையினதும் வளர்ந்தவரினதும் நலனுக்கும் வெற்றிக்கும் எமது சமூகங்களினதும் பொருளாதாரங்களினதும் எதிர்காலத்திற்கு முக்கியமானவையாகும்.

சிக்கலான, வேகமாக நகரும் உலகில், கல்வி கற்பவர்கள் அனைவரையும் நாம் புதிய சவால்கள் மற்றும் வாய்ப்புக்களுக்கு முகங்கொடுக்கக் கூடியவர்களாக ஆக்குதல் அவசியமானது. கல்வியில், சமூக ரீதியானதும் உணர்வுபூர்வமானதுமான கற்றல் (SEL) வாய்ப்புக்களை உள்ளடக்குவதன் மூலம் முறைசார், மற்றும் முறைசாராத இரு சூழ்நிலைகளிலும் ஏற்படும் பல்வேறு நீண்ட கால நன்மைகளை சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. மேலும் சமூக மற்றும் உணர்வுபூர்வமான கற்றல் (SEL) ஒன்றிணைவை ஏற்படுத்தும், மாற்றங்களுக்கு முகம் கொடுக்கவல்ல வினைத்திறன் மற்றும் சக்தி வாய்ந்த பாடசாலைகள், சமுதாயங்கள் மற்றும் பணியிடங்களுக்கு வழிவகுத்து, நீண்டகாலத்தில் அரசாங்கங்களின் பணத்தைச் சேமிக்கவும் உற்பத்தித் திறனைத் துரிதப்படுத்தவும் உதவவல்லது.

உலகளாவிய மற்றும் தேசிய கல்விக்கொள்கைகளும், நடைமுறைகளும், ஒழுங்குகளும் பிறப்பில் இருந்தான பூரண மனித விருத்தியின் மையத்தில், சமூக ரீதியானதும், உணர்வுபூர்வமானதுமான கற்றலை வைக்க வேண்டும் என்பதே எமது நம்பிக்கை.

இந்த மாற்றத்தினைத் துரிதப்படுத்துவதற்காக, செல்ஸ்பேக் குளோபல் அமைப்பைச் சேர்ந்தவர்கள் 2018 டிசம்பர் முதல் *Social Emotional Learning: A Global Synthesis* (www.salzburgglobal.org/go/603) எனும் நிகழ்ச்சியை முன்கொண்டு செல்வதற்காக புதிய உலகளாவியதொரு கூட்டணியை உருவாக்கியுள்ளது. இந்த உலகளாவிய கூட்டணியானது, நான்கு இலக்குகளைக் கொண்டுள்ளது. அவையாவன:

- உலகம் முழுவதும் SEL இற்கு ஆதரவளித்தல்;
- கூட்டு முயற்சியுடனான திட்டங்கள், நிகழ்வுகளை ஒருங்கிணைத்தல்;
- கல்வியாளர்களுக்கு உயர் தரத்திலான வளங்களை வழங்குதல்; மற்றும்;
- SEL இற்கான புத்தம் புதிய ஆராய்ச்சிகளுக்கு ஆதரவளித்தல்.

மேலதிக விபரங்களை: www.karanga.org இல் பார்வையிடலாம்.

### செயற்படுவதற்கான தேவை

இளவயதினரை வாழ்க்கைக்கும்,தொழிலுக்கும் மகிழ்ச்சிகரமான வாழ்விற்கு தயார்ப்படுத்தி சமுதாயங்களில் அவர்களைத் துடிப்பாற்றலுடன் பங்களிப் செய்வதற்கு, ஊக்குவிக்கும் கல்வி முறைமைகளுக்காக உலகம் முழுவதுமுள் நாடுகள் உழைக்கின்றன. ஆயினும்,இந்நோக்கங்களை அடைந் கொள்வதற்குரிய வகையில் மாற்றமானது போதியளவு வேகமானதாகவே பரந்ததாகவோ நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் சவால்களுக் முகங்கொடுக்க சமூகங்களுக்கு உதவுவதாகவோ இல்லை. பிரதா பிரச்சனைகளுள் பின்வருவன உள்ளடங்குகின்றன:

- **பணியின் எதிர்காலம்:** துரிதமாக வளரும் பொருளாதாரங்கள் மற்று டிஜிடெல் மறுமலர்ச்சிக்கான திறன்கள் மற்றும் திறமைகளுடன் கூடியவர்கள சகல இளவயதினரையும் கல்வி மூலம் எவ்வாறு உருவாக்க முடியும்?
- **புத்தாக்க இயல்திறன்:** புத்தாக்க மீள்நோட்சி மற்றும் முயற்சியாண்ல உணர்வினை எவ்வாறு பாடசாலைகள் போசிக்க முடியும்?
- **கல்வி அடைவு:** ஒதுக்கப்பட்ட சமூகங்களில் பிரச்சினைகளுடனு அவரச நிலைமைகளுடனும் வாழும் சிறுவர்களிடமும் வளர்ந்தோரிடமும் கற் பெறுபேறுகளை எப்படி மேம்படுத்தலாம்?
- **உளவியல் ஆரோக்கியம்:** கட்டிளமைப் பருவ ஆரோக்கிய குறைபாட்டிற்கான பிரதான காரணங்களுள் ஒன்றாக மன அழுத்த காணப்பவதால் உளவியல் நலனை மேம்படுத்துவதற்கும் உளவியல் ஆரோக்கிய சம்பந்தமான பிரச்சினைகளைக் குறைப்பதற்கும் எவ்வாறு கல்வி உதவுகின்றது
- **சமூக நல்லிணக்கம்:** முன்னர் எப்போதும் இல்லாதவாறு சமூகங்க அதிகம் மாறிவருவதாலும் பிளவுபட்டுக் காணப்படுவதாலும், இளவயதின தமது சொந்த அடையாளங்களில் நம்பிக்கையை உணருவதற்கும் உள்நாட் மற்றும் உலகளாவிய மட்டத்தில் அதிகாரமுள்ளவர்களாகவிருப்பதற்கும் ந எவ்வாறு உதவ முடியும்?

### மாற்றத்தைத் துரிதப்படுத்துவதற்கான முன்னுரிமைகள்

சமூக ரீதியானதும் உணர்வு பூர்வமானதுமான கற்கைத் திட்டங்கள், மேற்குறிப்பிட்ட முக்கிய பிரச்சனைகளை கவனத்தில் எடுத்து பரந்தளவிலான, நீண்டகால நன்மைகளை தனிமனிதர்களுக்கும் சமூகத்துக்கும் வழங்குவதை உலகெங்கும் வளர்ந்துவரும் ஆராய்ச்சிகள் வெளிப்படுத்துகின்றன. எவ்வாறாயினும், இந்த விவாதமானது இதுவரை வெற்றி கொள்ளப்படவில்லை. இக்கூற்றானது SEL இனை கல்விச் சீர்திருத்தத்திற்கான உலகின் மிகச் சிறந்த மற்றும் குறைந்த செலவிலான வாய்ப்பாக நிலைநிறுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது.

SalzburgGlobal.org சமூக மற்றும் உணர்வுபூர்வமான கற்றலுக்கான செல்ஸ்பேர்க் கூற்றானது Salzburg Global Fellows உடன் இணைந்து ஆங்கிலத்தில் வரையப்பட்டது. சமூக மற்றும் உணர்வுபூர்வமான கற்றலுக்கான செல்ஸ்பேர்க் கூற்றானது Educate Lanka Foundation மூலம் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. செல்ஸ்பேர்க் கூற்றுக்கும், சமூக மற்றும் உணர்வுபூர்வமான கற்றலுக்குமான பங்காளராகவும் உறுப்பினராகவும் Educate Lanka Foundation செயற்படுகின்றது.

## சமூக மற்றும் உணர்வுபூர்வமான கற்றல் பற்றிய முக்கிய செய்திகள்

### சிறுவர்கள்

நாம் அனைவரும் இணைந்து பாடசாலையை அன்புமிகுந்ததும் பாதுகாப்பானதுமான இடமாக மாற்ற முடியும். கற்றலானது ஏனையோருடன் பகிர்ந்து கொள்ளப்படுகையில் வினோதமானதாகும். சமூக மற்றும் உணர்வுபூர்வமான திறன்கள் உங்களை உங்களுக்குச் சிறந்தவர்களாக உணர வைப்பதுடன், உங்களுக்கு மேலும் சிறப்பாக பணியாற்றி இலக்குகளை அடைவதற்கு உதவும்.

### பெற்றோர்

குடும்பத்தினுள் **SEL** இணை வளர்ப்பதிலும் அதனைப் பாடசாலையில் ஊக்குவிப்பதிலும் உங்களுக்குப் பிரதான பாத்திரமொன்று உள்ளது. மேலும் சமநிலைப்பட்ட மகிழ்ச்சிகரமான சிறுவர்களைப் போசிப்பதற்கு கல்விச் சூழல்களுக்கு **SEL** உதவுகின்றது. சமூக மற்றும் உணர்வுபூர்வ திறன்கள் உங்களது பிள்ளை உலகில் சிறந்த செயலாற்றலை மேற்கொள்ள உதவும்.

### சமுதாயங்கள்

அடிப்படை எண்ணக்கருக்களாகிய மரியாதை, கௌரவம் மற்றும் தன்னுடையதெனும் உணர்வு ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதன் மூலமாக சமுதாய நல்லிணக்கத்திற்கு **SEL** உதவுகின்றது. துடிப்பாற்றலுள்ள, செழிப்பான, புத்தாக்கமிக்க சமுதாயங்களுக்கு **SEL** ஆதரவளிக்கின்றது.

### ஆசிரியர்கள்

**SEL** மாணவரின் கற்றல் மூதான நோக்கு, ஈடுபாட்டினை அதிகரித்தல் மற்றும் நலன்பேணல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றது. **SEL** ஆதரவளிக்கப்பட்ட ஆசிரியர் மாணவர்களுடன் மிகச் சிறந்த நல்லுறவினைப் பேணுகின்றார். **SEL** ஆதரவளிக்கப்பட்ட ஆசிரியர் மேலும் மகிழ்ச்சிகரமானவராகவும், வெகுமதியளிப்பவராகவும் வினைத்திறன் வாய்ந்தவராகவும் விளங்குவார்.

### கல்வித் தலைவர்கள்

**SEL** அணுகுமுறைகள் ஆசிரியர்களின் வினைத்திறன் மற்றும் ஊக்குவிப்பினை மேம்படுத்தும். **SEL** அணுகுமுறைகளில் ஆசிரியர் நலன் மற்றும் அவர்களை வைத்திருத்தலில் நேர்மறையாகத் தாக்கம் செலுத்தும்.

### வியாபாரம்

நாளைய பொருளாதாரங்கள் சமூகரூதியான மற்றும் உணர்வுரூதியான கல்வியறிவு கொண்ட ஊழியப்படையினரை வேண்டி நிற்கின்றன. பாடசாலையிலும் பணியிடங்களிலும் **SEL** நிகழ்ச்சிகளில் முதலூடு செய்வதானது எதிர்காலப் பணியின் கேள்விகள் மற்றும் சவால்களை வெற்றிகொள்வதற்கு மேலும் ஊக்குவிக்கப்பட்ட மற்றும் திறமையான ஊழியப்படையினரை அபிவிருத்தி செய்வதில் உதவும்.

### கொள்கை வகுப்பவர்கள்

**SEL** நிகழ்ச்சிகள் சமூகங்களின்; மற்றும் பொருளாதாரங்களின் வளர்ந்து வரும் தேவைகளை நிறைவேற்றுவதற்கான பிரஜைகளின் இயலுமையை அதிகரிக்கின்றன. **SEL** முதலூடுகள் குறுகிய மற்றும் நூண்ட காலத்தில் அரசாங்கங்களின் பணத்தை சேமிக்கும்.

இதனை அடைவதற்கு, நாம் மூன்று பொதுவான சவால்களை வெற்றிகொள்ள வேண்டும் (உண்மையான மற்றும் உணரக் கூடிய):

- SEL இற்கு ஆசிரியர் தயாராதலும் வளர்ந்தோர் விளங்கிக் கொள்ளலும் மதிப்பிடலும்;
- பாடவிதானத்ததை வடிவமைத்தல், பாடவிதான உள்ளடக்கம், மற்றும் இணைபாடவிதான கற்றல் வாய்ப்புக்கள்; மற்றும்
- SEL அளவூடும் மதிப்பூடும்.

உலகின் பல்வேறு பகுதிளிலுமுள்ள கல்வித்துறைத் தலைவர்கள் மற்றும் புத்தாக்குநர்கள் தூர்வூகளை அபிவிருத்தி செய்வதிலும் முறைமைகளை மாற்றுவதிலும் ஏற்கனவே வெற்றியடைந்து காட்டியூள்ளனர். தற்போது இப்பணியினை எடைபோடும் நேரமாகும். சகல மாணவர்களுக்கும் சமூக மற்றும் உணர்வூபூர்வமான கற்றல் வாய்ப்புக்களை வழங்குவதற்கு நாம் இரண்டு முன்னுரிமைகளுக்கு முகங்கொடுக்க வேண்டும்:

1. **கல்வி முறைமைகளினுள்ளும் அதற்கு அப்பாலும் SEL இனது முறைசார் பிரயோகத்திற்கான விடயத்தை உருவாக்கி கேள்வியைக் கட்டியெழுப்புதல்.**
2. **என்ன மற்றும் ஏன் செயற்படுகின்றது என்பது பற்றிக் கவனத்திற்கொண்டு, உலகிலுள்ள மிகச் சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றி செயற்பாட்டை ஊக்குவித்தல்.**




SalzburgGlobal.org சமூக மற்றும் உணர்வூபூர்வமான கற்றலுக்கான செல்ஸ்போர்க் கூற்றானது Salzburg Global Fellows உடன் இணைந்து ஆங்கிலத்தில் வரையப்பட்டது. சமூக மற்றும் உணர்வூபூர்வமான கற்றலுக்கான செல்ஸ்போர்க் கூற்றானது Educate Lanka Foundation மூலம் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. செல்ஸ்போர்க் கூற்றுக்கும், சமூக மற்றும் உணர்வூபூர்வமான கற்றலுக்குமான பங்காளராகவும் உறுப்பினராகவும் Educate Lanka Foundation செயற்படுகின்றது.

## கல்வியை அனைவருக்குமானதாக மாற்றுதல்:
## எண்ணக்கருக்களும் பரிந்துரைகளும்

### கற்பித்தல் முறை, பாடவிதானம் மற்றும் மதிப்பீடு

ஒவ்வொரு கல்வி முறைமையும் கட்டிளமைப் பருவம் முதல் வளர்ந்தோராகும் வரை சகல வயதுகளிலும் அவர்களது கற்பித்தல் முறை, பாடவிதானம் மற்றும் மதிப்பீட்டில் விரைவாகவும் சிறப்பாகவும் வெளிப்படையாக **SEL** ஐ உள்ளடக்க வேண்டும். ஒரு விடயப் பரப்பிலல்லாது இன்னொன்றில் முதலீடு செய்வதானது விரும்பப்பட்ட மாற்றத்தை ஏற்படுத்தாது. **SEL** கற்பவர் மையப்படுத்தப்பட்ட கற்பிக்கும் முறைகள், பாடவிதானம் மற்றும் மதிப்பீட்டு அணுகுமுறைகள் உலகளாவிய சான்றுகள் மீது பல்வேறு கலாசார கருத்தாக்கங்களைக் கட்டியெழுப்புவதற்காக ஒவ்வொரு நாட்டினதும் சூழ்நிலைக்கேற்ப வடிவமைக்கப்பட வேண்டும்.

பௌதீகரீதியாக உணர்வுபூர்வமான பாதுகாப்பு கொண்ட அனைவரையும் உள்வாங்கும் கற்றல் மற்றும் பாடசாலைச் சூழலை **SEL** வேண்டி நிற்கின்றது.

**SEL** பயிற்சியானது ஆசிரியர் நலன் மற்றும் மாணவர்களுடனான அவர்களது உறவில் ஒரு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதால் அது மாணவர் பெறுபேறுகளில் ஒரு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கிடையிலான உறவு மற்றும் ஆசிரியர்களின் சமூக மற்றும் உணர்வுபூர்வமான நலன் ஆகியன மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இரு சாரரினதும் வெற்றிக்கு முக்கியமானதாகும்.

மக்கள் (மாணவர்கள், பெற்றோர்கள், அரசாங்கங்கள் மற்றும் பொதுமக்கள்) கல்வியில் எது முக்கியமானது என்பதை எவ்வாறு தீர்மானிக்கிறார்கள் என்பதில் மதிப்பீடுகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. கல்விச் சோதனை வடிவமைப்பு அதன் பரப்பெல்லை என்பனவற்றில் ஆழமான சமூக மற்றும் தொழில்சார் பாதிப்புக்கள் உள்ளன.

மெடா- பகுப்பாய்வுகளின்படி குறுகிய மற்றும் நீண்டகால கல்விசார் பெறுபேறுகள், ஊழியப்படையினரின் தயார் நிலை மற்றும் சுகாதாரம் மற்றும் நலன் ஆகியவற்றின் சிறந்த முன்கணிப்புக்களாக சமூக மற்றும் உணர்வுரீதியான திறன்கள் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், இந்த திறன்கள் அதிகமான மதிப்பீடு மற்றும் அளவீட்டு நிகழ்ச்சிகளிலிருந்து வெளியேற்றப்பட்டனவாகும்.

சகல சிறுவர்களுக்கும் சமூக மற்றும் உணர்வுபூர்வமான கற்றலை அணுகுவதற்கான வாய்ப்புக்கள் காணப்பட வேண்டுமென நாம் நம்புகின்றோம். ஆகையால், அனைத்து மதிப்பீட்டு முறைமைகளும் சமூக மற்றும் உணர்வுபூர்வமான கற்றல் மதிப்பீட்டினை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். சூழல் பொருத்தப்பாடுடைய சமூக – உணர்வுபூர்வமான கற்றல் முன்னேற்றங்களின் அபிவிருத்தியும் சரிபார்த்தலும் இத்துறையில் முக்கியமான அடுத்த படிமுறைளாக விளங்குகின்றன.

### சமுதாயம்

குடும்ப – மற்றும் சமுதாய அடிப்படையிலான கல்வியானது முறைசார் கல்விக்கு அப்பால் வாய்ப்புக்களை உருவாக்குகின்றது. இது மிகவும் ஒதுக்கப்பட்டவர்களைச் சென்றடைவதற்கான சாத்தியத்தைக் கொண்டுள்ளதால், வாய்ப்பு இடைவெளியினைக் குறைப்பதற்கு உதவுகின்றது.

சில விடயங்களில், **SEL** இற்கான ஒரே இடமாக சமுதாயம் காணப்படுகின்றது. அணுகுமுறைகள் நம்பகமாகவும், சூழ்நிலைக்குப் பொருத்தமானதாகவும் மற்றும் சமுதாய மையப்படுத்தப்பட்டதாகவும் காணப்படும் பட்சத்தில் சமுதாயங்கள் **SEL** இணை போசிக்கவும் மீள்வலியுறுத்தவும் முடியும்.

SalzburgGlobal.org சமூக மற்றும் உணர்வுபூர்வமான கற்றலுக்கான செல்ஸ்பேர்க் கூற்றானது Salzburg Global Fellows உடன் இணைந்து ஆங்கிலத்தில் வரையப்பட்டது. சமூக மற்றும் உணர்வுபூர்வமான கற்றலுக்கான செல்ஸ்பேர்க் கூற்றானது Educate Lanka Foundation மூலம் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. செல்ஸ்பேர்க் கூற்றுக்கும், சமூக மற்றும் உணர்வுபூர்வமான கற்றலுக்குமான பங்காளராகவும் உறுப்பினராகவும் Educate Lanka Foundation செயற்படுகின்றது.

### நெருக்கடி மற்றும் மோதல் சூழலில் கல்வி

எல்லா வகையான கல்வி முறைமைகளுடன் **SEL** இனை ஒருங்கிணைப்பது முன் பள்ளிப் பருவம் முதல் வளர்ந்தோர்; வரை சகல கற்பவர்களுக்கும் மிக முக்கியமானதாகும். நெருக்கடி மற்றும் மோதலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அது விசேட முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சில இடங்களில் நெருக்கடி மற்றும் முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட நாடுகளில் **SEL** இனை கல்வியூடன் ஒருங்கிணைப்பதற்கான நடைமுறைரூதியான வழிகாட்டல்கள் காணப்படுகின்றன. ஆனால், அங்கு ஆராய்ச்சி, நடைமுறைகள் மற்றும் கொள்கையில் மேலதிக வேலைக்கான உண்மையான தேவை காணப்படுகின்றது.

References are available online:
www.salzburgglobal.org/go/education

Images credit:
Salzburg Global Seminar/Wolfgang Irber










SALZBURG GLOBAL SEMINAR | ETS | QATAR FOUNDATION INTERNATIONAL | Microsoft | PORTICUS | IDB | CALOUSTE GULBENKIAN FOUNDATION | BRITISH COUNCIL